**சுருக்கம்**

அறிவிப்புகள் – 2021 – 2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் – கல்வி – விடுதிகள் – அரசு சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வரும் விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு நிருவாக ஒப்புதல் அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(1))த்துறை**

அரசாணை (நிலை) எண்.57 நாள் 10.11.2021

பிலவ, ஐப்பசி 24

திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டது:

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண்.சி2/3785/2021, நாள் 15.09.2021.

********

**ஆணை:**

2021 – 2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது "விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு பெறப்பட்ட மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடிதத்தில், அரசு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியரின் பாதுகாப்பு நலன் கருதி, அவ்விடுதிக் கட்டடங்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய நிதி ஒதுக்கீடு வழங்கிடுமாறு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் கேட்டுக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் அவ்விடுதிகளில் தண்ணீர் வசதி, மின்சார உபகரண பராமரிப்புப் பணி, கழிவுநீரை வெளியேற்றுதல், சமையலறை பழுதுகள் மற்றும் இதர பழுதுகளை சீர்செய்ய வேண்டிய நிலை உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. எனவே. அரசு கட்டடங்களில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் தேவைப்படும் விடுதிகளை மாவட்ட வாரியாக ஸ்தல ஆய்வு மேற்கொண்டு, விடுதிகளின் பட்டியலினை பெற்று, முன்னுரிமை பட்டியலை தயார்

செய்து, இரு துறைத் தலைவர்கள் மற்றும் பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் ஒப்புதலுடன் ரூ.13.00 கோடிக்கான பணிகளின் பட்டியலை இறுதி செய்து, பொதுப்பணித்துறை மூலம் விடுதிக் கட்டடங்களுக்கு உண்டான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கோரியுள்ளார். மேலும், இதற்கென நடப்பு நிதியாண்டில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்கு ரூ.7.00 கோடியும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ரூ.6.00 கோடியும், ஆக மொத்தம் ரூ.13.00 கோடியினை, ஒரு முறை ஒதுக்கீடாக 2021 – 2022–ல் நிதி ஒதுக்கம் செய்து ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4. இக்கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்து, அரசு கட்டடங்களில் இயங்கிவரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு தேவையான சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகளை பொதுப்பணித்துறையின் மூலம் ரூ.13,00,00,000/– (ரூபாய் பதிமூன்று கோடி மட்டும்) செலவில் நடப்பாண்டில் மேற்கொள்ள நிருவாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டிய விடுதிகள் கண்டறியப்பட்ட பின்னர் திட்ட அறிக்கையின் அடிப்படையில் நிதி ஒப்பளிப்பிற்கான கருத்துருவினை அனுப்பி வைக்குமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை பொதுப்பணித்துறை மற்றும் நிதித்துறையின் இசைவினை முறையே அதன் அலுவல் சார்பற்ற எண்.17722/G1/2021–1, நாள் 28.09.2021 மற்றும் அலுவல் சார்பற்ற எண் 48552/நிதி(பி,மிபி(ம)சிந)த்துறை, நாள் 09.11.2021–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை–5.
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை– 5.
மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 1), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 2), சென்னை–18 (பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை– 1.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு), மதுரை.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர்
நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை– 9.
இயக்குநர், சிறுபான்மையினர் நலன், சென்னை–5.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நல(பிந3)த்துறை, சென்னை–9.
நிதி (பி, மிபி (ம) சிந)த்துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு/உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

10/11/21

பிரிவு அலுவலர்

10.11.2021